உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆூ பிப்ரவரி மீ [இதழ் ௨.

இலௌகிகப் பகுதி.

திருக்கோவலூர் ஆதீனம்
திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் படாலயம் ஸ்ரீலஸ்ரீ
சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
சரிதம்.

விரிகட லுலக மதிப்பிடற் கரிய விஞ்சையும் விடையவ னருளு
மரியமா னுடத்தின் பயனையும் பெற்றே யானந்த சாகர மூழ்கிப்
பரமனோ டிருக்கும் பதமதும் பெறுவர் பாவலர் பயனதா யுதித்த
குருபரன் கோவற் சண்முகப் பெருமான் குரைகழல் வழங்குமன் பர்களே.

அரும்பெறன் மகவா யுதித்து வளர்பிறையென வொளிரும் நமது கலைமகளின் அங்கத்திற் கணியாக, பல பெரியார் சரிதங்கள் வெளி வர வேண்டுமெனும் அவாக்கொண்டு, சில சரிதங்கள் சுருக்கமாக எனது அறிவிற் கெட்டியவரையில் தீட்டிவருதல் அன்பர் பலரும் அறிந்ததேயாகும். முற்காலத்துச் சமயாசாரியர்கள் பலர் உலகத்திற் றோன்றி, பல சமயங்களை நிலைநிறுத்தியதாகப் புராண வாயிலாக உணர்ந்த நாம், அத்தகைய

பெரியார்களைத் தரிசித்தற் கில்லையேயெனும் ஏக்கமுறு வண்ணம், நமது தவப்பயனு யவதரித்துச் சைவ சமயத்தையும், தமிழ் மகளையும் உலகத்து நிலைநிறுத்திய பெருங் கருணைவள்ளலும் எமது குருமூர்த்திகளுமாகிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். சரிதமும் எழுதும் பாக்கியம் பெற்றமைபற்றி எமக்குண்டாய மனக்கிளர்ச்சி பக்தி வலையில் ஈடுபடுத்தி விட்டமையால், அன்பின் மிகுதியான் தவறுகளுண்டாயினும் அறிவாளிகள் மன்னிப்பார்களென நம்பி வரைவான் றுணிந்தனன்.

சோழநாட்டிலே 108 திருப்பதிகளில் ஒன்றாகியும், மூவரால் பாடல்பெற்ற சிவஸ்தலங்களுள் சிறந்ததுமான "திருநாகேசுரம்" எனும் திவ்விய க்ஷேத்திரத்திலே வீரசைவ மரபிலே அவதரித்த அண்ணாமலை ஐயர், பார்வதீ அம்மா எனும் இரு முதுகுரவர்களின் றவப்பயனாக, ஸ்ரீமுக ஞு வைகாசி மீ 4-ம் உ குருவாரம் மூல நக்ஷத்திரம் தனுர் லக்கினம் கூடிய சுபதினத்தில், நமது சுவாமிகள் திருவவதாரஞ் செய்தனர். குழவிப் பருவ முதிர்ந்து இளமைப் பருவம் வாய்த்த பின், தங்கள் வீட்டுக் குலகுருவாகத் திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் சுவாமிகட்குத் தமது பிதா முதலியோர் தொண்டு செய்துகொண்டிருந்தமையால், அங்கு வந்து சேர்ந்தனர். பின்னர் உபாத்தியாயர் சென்னகேசவலு நாயடு என்பார் நமது சுவாமிகட்கு முதன் முதல் தெலுங்கு அக்ஷராப்பியாசஞ் செய்வித்துப் பின் தமிழ் போதிக்கும் ஆசிரியராக அமர்ந்தனர். சுவாமிகளும் இளமையிற் கல்வியை அன்பொடு பயின்று தெலுங்குந் தமிழு மோதிவந்தனர். இஃதிங்ஙனமாக, நடு நாட்டில் மிக்க வளஞ் செறிந்ததும் அட்டவீரட்டானங்களுள் ஒன்றும் அந்தகாசுர சம்மாரஞ் செய்த ஸ்தலமுமாய 'திருக்கோவலூரில்' வடநாட்டிலிருந்துவந்த நிஷ்டானுபூதிச் செல்வரும்,'நிஷ்டானுபூதி' எனும் அரிய ஞான சாஸ்திரத்தை இயற்றியவருமான "ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் கலி 4774 ஆனந்த ஞு கார்த்திகை மீ கிர்த்திகை நக்ஷத்திரத்தன்று ஓர் மடாலயத்தைப் பிரதிஷ்டை செய்தனர். உண்மை ஞானிகளாய ஷெ சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ஷெ மடாலயத்தை "ஞானியார் மடாலயம்" என எவரும் வழங்குவாராயினர். ஷெ சுவாமிகள் கைவல்ய முற்றபின், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் இரண்டாவது பட்டமாக விருந்தனர். ஷெ சுவாமிகளும் அறுமுகப் பெருமான் மீது மிக்க அன்புடையாராய் "முருகாந்தாதி" முதலிய நூல்களை இயற்றினர். அக்காலத்து, திருப்பாதிரிப்புலியூரிலும் ஓர் மடாலயம் ஸ்தாபித்து, அதில் பெரும்பாலும் வதிந்துவருவாராயினர். அவர்கட்குப்பின்

சிவசண்முக சங்கண வசவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மூன்று வது பட்டமாகவிருந்து கைவல்ய முற்றபின், சிவசண்முக பாசிவ மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள் 4-வது பட்டமாக வீற்றிருந்தனர். ஷை சுவாமிகள் தமக்கு அந்தியகாலம் சமீபித்த துணர்ந்து, தமக்குப்பின் ஷை மடாலயத்தைப் பரிபாலிக்கும் தகைமையுடையார் நமது சுவாமிகளே என வோர்ந்து, செண்ட் ஜோஸப் பிரான்ச் ஹைஸ்கூலில் 1884-ம் வருஷத்தில் கல்வி பயிலவைத்தனர். அங்கும் நமது சுவாமிகள் மிக்க ஊக்கமுடையாராய்க் கற்று 1889-ல் ப்ரீமெட்ரீகுலேஷனில் வாசித்தனர். இடைக்காலங்களில் ஷை 4-வது பட்டத்துச் சுவாமிகளே ஆதீன சம்பந்த நூலும், வீரசைவ மரபுநூலும், உபாசனுவகையும் போதிக்க உணர்ந்து வந்தனர். பின் சென்ற விரோதி ஞூ ஐப்பசி மீ 3-ம் உ குருவாரம் நமது சுவாமிகட்கு ஷை சுவாமிகளின் திருக் காத்தினலேயே சந்நியாசம் தந்து ஆசாரியாபிஷேகமும் செய்வித்தனர். அடுத்த கார்த்திகை மீ 7 ம் உ குருவாரம் பட்டாபிஷேகம் மிக்க ஆடம்பரமாக நடந்தேறியது. நமது சுவாமிகள் ஆதீனத்திற்கு வந்தபின், தற்போது சிவகங்கை ஹைஸ்கூல் உபாத்தியாயராயுள்ள பிரஹ்மஸ்ரீ செய்வசிகாமணி ஐயரவர்கள் சிலகாலம் தமிழ் போதித்து வந்தனர் எனினும், பிரஹ்மஸ்ரீ சி. மு. சாமிநாத ஐயரவர்களே நமது சுவாமிகட்குத் தமிழ் பயிற்றுவித்த ஆசிரியராவர். இடையில் சிறிதுகாலம் ஸ்ரீமத் உ. வே. கோவிந்தாசாரியா ரவர்களிடமும், தற்போது காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் பாடசாலையில் சமஸ்கிருத உபாத்தியாயராயுள்ள பிரஹ்மஸ்ரீ இராமநாத சாஸ்திரிகளிடமும் சமஸ்கிருதம் பயின்றனர். நம் குருமூர்த்திகள் கல்வி பயின்ற காலம் சொற்பமெனினும், தீபத்திலேற்றிய தீவர்த்தியொப்ப, அறுமுகப் பெருமானின் திருவருளால் கல்வி பிரகாசிக்கத் தொடங்கியது. அவர்களது வாக்கினின்றெழும்ஒவ்வொரு வார்த்தையும், ஆவியைக் காக்கு மமுதமென வொளிரும்படியாயது. கடன்மடை திறந்தாலென்னப் பிரசங்க மாரி பொழியும் நமது சுவாமிகளின் வார்த்தையைக் கேட்ட ஒவ்வொருவரும் பிறவியினலாய பயனைப் பெற்றனர் எனின், அவர்கள் வாக்கு வல்லமையையும் உபந்நியசிக்கும் திறத்தையும் எவரே கணிக்கற்பாலார்! பலர் நமது சுவாமிகளை ஆதீன மரியாதையாயுள்ள மேனு மூலமாகத் தங்கள் தங்கள் நகருக்கு அழைத்துச் சென்று உபந்நியசிக்கச் செய்து கேட்டு மகிழ்வாராயினர். மற்றைய காலங்களில் மடாலயத்திற்கு வரும் அன்பர் பலரும் கேட்டு மகிழும் வண்ணம் சென்ற பத்து வருடங்கட்கு முன் "வாணீவிலாச சபை" என ஓர் சபை ஸ்தாபித்து அதில் ஆதிவாரந்தோறும் அரிய பல உபந்நியாசங்கள் புரிந்து வருகின்றனர். அன்பர் பலர்

30

வேண்டுகோட் கிணங்கி ஏட்டுச் சுவடியாக விருந்த திருப்பாதிரிப்புலியூர் ஸ்தல புராணத்தைப் பார்வையிட்டு வெளிப்படுத்தினர். சென்ற மூன்று வருடங்கட்கு முன் தெய்வீக ராஜன் சந்ததியாருக்காக, "பார்க்கவகுல சங்கம்" என ஓர் சபை ஸ்தாபித்தனர். அக்கால் பல்லாயிரம் பொன் கொண்டு திருக்கோவலூர்ப் புராதன மடாலயத்தை, காண்போர் கண்ணை யும் மனதையுங் கவரும் வண்ணம் புதுப்பித்தனர். சென்ற இரண்டு வருடங்கட்கு முன் ஷை மடாலயத்திலேயே "கோவல் சைவ சித்தாந்த சபை" என ஓர் சபை ஸ்தாபித்தனர். அக்கால் "கோவல் மான்மிய சங்கிரக வசனம்" "சத்திய விஜயநகரம் சண்முகர் தோத்திரம்" இவை கள் இயற்றி வெளியிட்டதுமன்றி, ஆதீன குருமூர்த்திகள் மீதுள்ள "சிகாமணிப் பதிகமும்" பார்வையிட்டு வெளியிட்டனர். பின்பு பலரின் வேண்டுகோட்கிணங்கி, புதுவைக் கலைமகள் கழகத்திற்கு நிரந்தரகௌரவ அக்கிராசனாதிபதியாகவும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு நிரந்தர அக்கிராசனாதிபதியாகவு மிருந்து வருகின்றனர். அன்றியும், புதுவைக் கலைமகள் கழகம், புதுவைச்செந்தமிழ்ப் பிரகாச சபை, வண்டிப் பாளையம் சோமாஸ்கந்த பக்த ஜன சபை, கூடலூர்ச் சன்மார்க்க சபை, வேலூர், கூடலூர் இவைகளில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜம், உத்தரமேரூர்ச் சைவ சித்தாந்த சபை, செங்கற்பட்டுச் சைவசமயாபிவிர்த்தி சங்கம், காவித் தண்டலம் சைவ சித்தாந்த சபை முதலிய பல சபைகளின் வருடோற்சவத்தில் அக்கிராசனம் அமர்ந்து அரிய பல உபந்நியாசங்கள் புரிந்தனர். பின் பல அன்பர்களின் வேண்டுகோளைப் பூர்த்திசெய்யும் வண்ணம் யாத்திரையாகப் புறப்பட்டு, புதுவை, திருவண்ணாமலை, போளூர், வேலூர், ஆரணி, சத்திய விஜயநகரம், கண்ணமங்கலம், திருவலம், திருக்கண்டீச்சுரம், திருக்கோவலூர், மணம்பூண்டி, அரையணிநல்லூர், நெற்குன்றம், செந்நெற்குன்றம், சித்தலிங்கமடம், கூடலூர், புதுவண்டிப் பாளையம், பழைய வண்டிப்பாளையம், மஞ்சகுப்பம், முருகேசநகர், திருவெண்ணெய்நல்லூர், இருவேலிப்பட்டு, கலியாணம்பூண்டி, நெசல், ஐந்நூறு, சிவகிரி, விழுப்புரம், அணையேறி, பூலோகநாதர் கோயில், திருவெறும்பியூர், மாத்தூர், காளஹஸ்தி, ரேணுகொண்டா, பூதலூர், சித்தூர், திருத்தணிகை, காஞ்சீபுரம், முத்தியாலுப்பேட்டை, கதிர் காமம், மீனாக்ஷிபேட்டை, தொண்டமாநத்தம், புதுக்குப்பம், குரிஞ்சிப் பாடி, கிளியனூர், தானமானியம், முளசூர், திருப்பாசூர், திருமாற்பேறு, திருவூரல், ஐயங்கார்குளம், பனப்பாக்கம், திருமாகறல், உத்தரமேரூர், செங்கற்பட்டு, நத்தம், கல்லேரி, பரிக்கல், வல்லீபுரம், திருக்கழுக் குன்றம், புலம்பாக்கம், கயப்பாக்கம், செம்பாக்கம், திருப்போரூர்,

மானாம்பதி, இறைவாசநல்லூர், திருமுதுகுன்றம் முதலிய பல தலங்கள் சென்று ஆங்காங்குள்ள அன்பர்களின் மனம் பரவசமடையும் வண்ணம் அரிய பெரிய பல உபந்நியாசங்கள் புரிந்து வந்தனர். அன்றியும், கோவல், பீலிசை முதலிய தலங்களிலுள்ள மடாலய ஆதீன சந்நிதிகளில் நித்திய, நைமித்திக ஆராதனைகள், குருபூஜைகள், சஷ்டியாதி மகோற்சவங்கள் யாவும் சிறப்பு வகையாகச் செவ்வனே நடைபெறுகின்றன.

சுவாமிகள் வதியு மிடங்களில் சைவ மணமும், தமிழ் மணமும் ஒருங்கே கமழ்கின்றன. அவர்களின் அரிய செயல்களையும், அபார சக்தியையும் ஆலோசிக்குங்கால், ஓர் அவதார புருஷரே எனக் கருத வேண்டி யிருக்கிறது. செல்வவந்தர்கள் முதல் ஏழைகளீறாக உள்ள யாவரிடத்தும் குறையாத அன்புடைமை காட்டும் சுவாமிகளின் பெருந்தகைமையை எவ்வாறு புகழ்வேம். அறுமுகப் பெருமான் றிருவருட் பெருக்கத்தைச் சுவாமிகள் கூறுங்கால், மனங்கனிந்து பத்தி வலையிற் படாக் கன்னெஞ்சருமுளரோ! "அமிழ்தினு மினிய தமிழ்மொழி" என ஆன்றோர் கூறிய வாக்கின் பெருமை, சுவாமிகளின் உபந்நியாசத்தைக் கேட்ட பின்னன்றோ மதித்தல் வேண்டும். உலகத்திலுள்ள பல அன்பர்கள் ஈடேற வேண்டியும் "சைவ சமயமும், தமிழ் மகளும்" தழைத்தோங்கவும் அவதாரம் செய்துள்ள எம் குருமூர்த்திகள் எல்லாம் வல்ல இறைவன் றிருவருளால் நீடூழி வாழ்ந்து எம்போல்வாரை ஈடேற்றுவார்களாக. சுபம். சுபம். சுபம்.

N. B. நமது சுவாமிகளின் திருவவதார தினமும், ஆசாரிய அபிஷேக தினமும், பட்டாபிஷேக தினமும் குருவாரமென்பது குறிப்பிடத் தக்கது.

"அந்நாளி லமரரெலா மமுதமெழக் கடல்கடைந்த வாகு லத்தாற் [ளோர்
பன்னாளிற் செய்தொழிற்கே பலன்பெற்றோ மெனக்களித்தார் பாரி லுள்
இந்நாளிற் கல்வியெனு மமுதினொடு வலியவரு ளீந்தாட் கொள்ளும்
பொன்னாருங் கமலவயற் புலிசைநக ரடிகளிரு பூந்தாள் வாழ்க."

தி. வடிவேலுமுதலியார்,

திருவெண்ணெய்நல்லூர்.

பாலசிக்ஷை.

8-வது அத்தியாயம்.

4-வது வயது.

அறிவுப் பயிற்சி.

கவனம்.

(வெண்டாமரை உ, 278-வது பக்கத் தொடர்ச்சி.)

கவனம் அறிவுப்பயிற்சிக்கு இன்றியமையாததென்பதைப் பற்றி மற்றும் விசாரிப்பாம்.

இந்திரியங்களாலேற்படும் போதத்தை அகக் கண்ணால் உற்று நோக்கி அகப் புறப்பொருள்களை யறிதலே கவனமெனப்படும்.

மனிதன் சகல சிருஷ்டிகளிலும் ஒப்புவமையில்லாத மேம்பாடடைதற்குக் கவனமொன்றே காரணம். ஆதியில் முற்றும் கேவல ஸ்திதியிலிருந்த மனிதன் கவனத்தினாலேயே தன்னறிவை யபிவிருத்தி செய்துகொண்டது மன்றி, பிரபஞ்சத்தின் மறைந்து கிடந்த இயற்கை விதிகளையும் யூகித்தறிந்து அவைகளால் தனக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் சாதித்துக்கொண்டான். இலௌகிக விஷயங்களில் நவீனமாக அவன் கண்டறிந்த ஒவ்வொன்றுக்கும் கவனமே மூலகாரணமாய் நின்றது.

நியூட்டன் என்னும் ஆங்கிலேய நிபுணர் ஒரு நாள் ஒரு மரத்தினின்று ஒரு கனி விழக்கண்டனர். உலகாரம்பமுதல் எத்தனையோ கோடி சனங்கள் மரங்களினின்று பழங்கள் விழுவதைப் பார்த்திருப்பினும் இதுவிஷயத்தி லொருவரேனும் விசேஷ கவனத்தைச் செலுத்திக் காரணம் விசாரித்திலர்போலும். நியூட்டன் என்பவரோ "என் பழுத்த பழம் நிலத்தில் வீழ்கின்றது? என் மரக்கிளையிலேயே நிற்கின்றதில்லை? என் ஆகாயத்திற் கிளம்பிச் செல்வதில்லை?" என்ற இத்தகைய ஆராய்ச்சிகளில் தன் முழுகவனத்தையும் செலுத்தி, பிரபஞ்ச இயற்கையையும் பிரகிருதி சாத்திரத்தையும் அறிதற்கு அத்தியாவசிகமான ஆகர்ஷண சக்தியின் விதிகளைக் கண்டறிந்து உலகத்திற்குப் போதித்தார்.

ஒரு நாள் தேனிபப்பேன் என்னும் பிராஞ்சுக் கலைவல்லோர்மெல்லிய மேன்மூடியினால் மூடப்பட்ட ஒரு செப்புப்பாத்திரத்தில் நீர் கொதித்துக்கொண்டிருந்ததை நோக்கியிருந்தனர். பாத்திரத்தில் ஆவி அதிகப்பட்டால் மேல்மூடி கிளம்புவதும், ஆவி புறம் போந்தவுடன் முன்போல்

கீழ்விழுவதுமாகக் கண்டார். அவருக்கு முன் மாந்தர் கணக்கிலர் அவ்வாறு மூடிய பாத்திரத்தில் நீர் கொதிப்பதையும் மேல் மூடி கிளம்புவதையும் பார்த்திருந்தாரேனும் பயனென்னை?

பப்பேன் என்பவரோ தாம் கண்ட காட்சியின் காரணத்தை அதி கவனத்துடன் ஆலோசித்தறிந்து நீராவியின் வியாபக சக்தியைக் கண்டறிந்து உலகுக்குக் கற்பித்தனர். இவர் கவனமே, புகைரதமென்றும், புகை மரக்கலமென்றும், புகை யந்திரங்களென்றும் உலக முழுவதிற்கும் இயம்புதற்கரிய இலாபத்தைக் கொடுக்கும் நீராவிக் கருவிகள் ஏற்படுவதற்கு ஆதிகாரணமாக விருந்தது.

கல்வானி என்ற இத்தாலிய பண்டிதர் செத்துத்தோலுரிப்பட்டுக் கிடந்த ஒருதவளையின் கால்கள், இரும்பு செம்பு உலோக வஸ்துக்களில் ஸ்பரிசப்பட்டபோதெல்லாம் துடிதுடிப்பதைக் கண்டு, அதன் விஷயத்தில் தன் கவனத்தைச் செலுத்திச் செய்த ஆராய்ச்சிகளே நமக்கு இற்றைக்குச் சொல்ல முடியாத பிரயோசனத்தைக் கொடுக்கும் மின் சார சக்தியறிதற்கு முக்கிய ஏதுவாயிருந்தன.

சாத்திர முறைகளிலும் நவீன சௌகரியங்களிலும் நாம் எவ்வெவற்றை நோக்கினும் அவ்வவற்றின் ஒவ்வொன்றையும் நாம் கவனத்தின் பயனாகவே அடையப் பெற்றோமென்பது காதலாமலகம்போல விளங்கும்.

இலௌகிக விஷயங்களைக் கிரகித்து அறிவதற்கு மாத்திரமன்று, தெய்விகஞான மடைவதற்கும் கவனமே அத்தியாவசிகமா யிருக்கின்றது.

பதி பசு பாச தத்துவங்களை யறிதற்கு எத்தகைய பூரண கவனம் வேண்டுமென்பதற்கு இருடிகளே இலக்காயிருக்கின்றனர்.

முற்றிய ஞானிகளும், நம்பக்கலிருந்து நிரந்தரமும் தாமும் ஆடிக்கொண்டு நம்மையும் ஆட்டிவைக்கும் ஐங்குரங்குகளையும் கொன்றுவிட்டுக் காட்டகஞ் சென்று மரமாயும் புற்றாயுங் கிடப்பதெல்லாம், ஒன்றெனப்படும் ஒன்றின்மீது செல்லும் தம் கவனம் வில்லலங்கப்படுமென்னும் அச்சத்தினாலன்றோ?

ஆயினும் நாலைந்து வயதுக்குழந்தைகளின் அறிவு வளர்தற்கு "மரமாயும் புற்றாயும்" கிடத்தற்பாலதாய கவனம் வேண்டியதின்று. மிதமிஞ்சிய கவனத்தினால் அறிவிற்கு ஆனியும் வரும். சிறுகுழந்தைகளின் கவன சக்தி மோப்பக்குழையும் அனிச்சமலர்போல நொய்மையுள்ளது. இவ்வுறுதியை யோராத பெற்றோரும் மற்றோரும் சிறு குழந்தைகள் கவ

னத்தை அமிதமாகப் பயிற்றி அவர்கள் மந்தர்களாகித் தீர்வதற்குத் தாங்களே காரணகர்த்தர்க ளாகின்றனர்.

கவனப் பயிற்சியின் குறைவினுல் மூடர்களான குழந்தைகளினும் அகால அமிதப் பயிற்சியினுல் தம் வாழ்நாளெல்லாம் அறிவு மழுங்கி நின்றவர்களின் தொகை மிகவும் பெரிது.

குழந்தைகளின் கவனசக்தியின் தத்துவங்களேயும் அதைப் பயிற்றும் முறைகளேயும் நன்கு அறிதல் பாலசிக்ஷையின் முக்கிய அம்சமாத லின், அவைகளில் நூலறிமேலோர் கூறியவற்றுட் சிலவற்றை விசாரிப் பாம்.

(வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

அந்தோ! தேனினு மினிய தென்மொழி சின்னுளி லென்னுமோ!!

பாணினிமுனிக்கு வடமொழியை யருளிய அப் பரப்பெருஞ் சுடரே அம் மொழிக்கு எற்றக் குறைவற்ற தென்மொழியைக் குட முனிக்கு அருளினரென்பது நூல் வழக்கு.

நந் தமிழ்மொழி வடமொழியினின்று பிறந்ததுமன்று, அதன்பால் இரந்துண்டு வளர்ந்ததுமன்று.

ஆரியம் அழகிற்பொலிந்து அரும் பெரு நூற்களே யணிந்துள்ள தென்பதற் கையப்பாடின்று. நந் தமிழ்ச் செல்வி மாத்திரம் பொலிவிற் ருழ்ந்தவளோ, நூற் செல்வத்திற் குறைந்தவளோ?

தேவர் குறளும், திருவாசகமும், மூவர் மொழியும், ஐம்பெருங் காப்பியமும், கம்பர் கவியும், சங்கப்புலவர் தங்கப்பனுவலும் வட மொழியோ? தென்மொழியோ?

பண்டைத்தமிழ் நூற்களில் இற்றைக்கு எஞ்சிநின்றவை சிலவே. எண்ணிறந்தன காலத்தோ டிறந்து மறைந்தன.

இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், நச்சினுர்க்கினியர், பரிமே லழகர் முதலிய முத்தமிழ்த்துறையின் முறையே போய உரையாசிரியர் எடுத்தாண்ட தமிழ்நூற்களில் மாய்ந்து மறைந்தவை எண்ணில. அன்

னவர் காலத்துக்கு முன்னரே அளவிறந்தன இறந்தனவென்றும் கூறியுள்ளனரே.

தென்மொழி, நூற் செல்வத்தில் மாத்திரம் மேம்பாடுடையதன்று, சொல்வளத்தினும் சிறந்துள்ளது. ஒரு பொருளைக் குறிப்பதற்குத் தமிழில் எத்தனையோ பதங்களுண்டு. அதேபொருளின் பல்வேறு கருத்தை விளக்குவதற்குப் பல்வேறு மொழிகளு முண்டு. ஒரு சொல்லே அற்றம் நோக்கி எத்தனையோ பொருளைப் பயக்கினும் பயக்கும்.

இத்தகைய சொல்வளம் பொருந்திய தமிழொடு பிறமொழிகளின் சொற்களை யிழுத்துப் புணர்த்தல் மடமையன்றோ! இல்லாதவனன்றோ இரக்கவேண்டும்? கைப்பொரு ளற்றவனன்றோ கடன் வாங்கவேண்டும்?

தமிழ்மறை யெனப்படும் திருக்குறளிலும், சங்கமருவிய நூற்களிலும் வடமொழிச்சொற்கள் காணப்படுவது மிக அருமை. எங்கேனும் அருகிக்காணப்படினும், அவை தமிழ்ச்சொற்களாகவே மருவிப்போய் நின்றவையாகும். தமிழ்மொழியில் எத்துணை வல்லுநரோ அத்துணை வடமொழியிலும் வல்லுநரெனப்படும் இளங்கோவடிகள், திருத்தக்கதேவர் முதலிய ஆன்றோர், தாம் அருளிய அரும் பெருநூற்களில் ஆரியச்சொற்களை இக்காலத்திற்போல் புணர்த்தினரல்லர். பண்டைய தண்டமிழ்க் காப்பியங்களில் ஆய்ந்தாய்ந்து தேடினும் தமிழாக மருவாத வடமொழிச் சொற்கள் மருந்துக்கும் கிடைத்தல் அரிது.

அந்தோ! இந்நாளிலோ, தமிழிலெழுதிய நூற்களென வெளிவரும் பலவற்றிலும், வலிய வீணிலிழுத்துப் புணர்த்திய வடமொழிச்சொற்களும் கிரந்த எழுத்துக்களினால் உருமாறிய தமிழ்மொழிகளும் நமது தமிழ்ச்செல்வியின் வடிவைக்கெடுத்துக் கவினைக்குலைத்து, நாம் வாசிப்பது தமிழ்தானோவென்று நாமும் மயங்குமாறு செய்கின்றன. தமிழில் பயிற்சியும் மதிப்புமற்ற வடமொழியாளர், தமிழி லெழுதப்புகுவதே இதற்கு முக்கிய காரணமாகும். அன்னவர் என் செய்வர், பாவம்! தம் கருத்தை விளக்குவதற்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் தம் அறிவுக்கு எட்டாத போதெல்லாம் ஆரிய மொழிகளைத் தமது உதவிக்கு அழைக்கவேண்டியவர்களாகின்றனர்.

தென்மொழியாளன் ஒருவன் ஆரியத்தை அரையும் குறையுமாகப் படித்துவிட்டு, தமிழ்ச்சொற்களும் தமிழெழுத்துக்களும் மலிந்துகிடக்குமாறு ஒரு ஆரிய நூலை யியற்றின், வடமொழிமாக்கள் அந் நூலை எத்துணையோ வெறுப்பர், ஆக்கினோனை எத்துணையோ சீறுவர்.

தமிழ்மொழிமாட்டு மாத்திரம் இத்தகைய அபிமானம் இல்லாதது என்னே? தனக்கொன்று பிறர்க்கொன்று என்பது ஆரிய தர்மமாமோ?

(தொடரும்.)

வெ. தம்பி - புருஷோத்தமன்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(இக்கதை கதா நாயகன் கூற்ருக எழுதப்படுகின்றது.)

அத்தியாயம்–1.

அம்மம்மா! என் செய்வேன்! என் சரித்திரத்தைத் தொடங்கும் பொழுதே ஒரு சஞ்சல சமாசாரம் சாற்றவேண்டியதிருக்கிறதே! ஆயினும் சோக விஷயத்தைச் சொல்லி இக் கதையைத் தொடங்காமல், நான் ஜனிப்பதற்கு முன்னமே நிகழ்ந்த சுபகாரியமாகிய என் தாய் தந்தையர் விவாகத்தினின்றும் தொடங்குகின்றேன்.

என்னைப்பெற்ற அன்னையின் பெயர் மனோன்மணியம்மாள். என் தந்தையின் பெயர் நந்தகோபாலர். நான் பிறப்பதற்கு இரண்டு வருடம் எழு மாதத்திற்கு முன்பு என் பெற்றோர்களிருவருக்கும் விவாகம் நிகழ்ந்தது. அவ் விவாகம் உலகில் நிகழும் பல விசித்திர சம்பவங்களிலொன்றென்னலாம். ஏனெனில், என் அன்னையின் பெற்றோர்களும் தந்தையின் பெற்றோர்களும் சற்று நெருங்கிய உறவினரேயாயினும் இவ்விரு குடும்பத்தாருக்கும் மூன்றுதலைமுறையாக ஜன்ம விரோதம். இவ்விரு குடும்பங்களிலும் உதித்த என் தாயும் பிதாவும் முறையே தங்கள் பன்னிரண்டாவது பதினேழாவது பிராயங்களிலிருந்து ஒருவர்க்கொருவர் தங்கள் உள்ளங்களில் உலையாக் காதல் பூண்ட உயிர்க் காதலராயினர். பிதுரார்ஜிதமாக ஜன்மப்பகையும் சுயார்ஜிதமாக உள்ளத்தில் உயிர்க் காதலுங் கொண்ட நந்தகோபாலருக்கும் மனோன்மணியம்மாளுக்கும் விவாகம் நிறைவேறிவிட்டது. அதற்கு நேர்ந்த இடையூறுகள் பற்பல. அவ்விடையூறுகளெல்லாம் எவ்வாறு நீங்கின? விவாகம் எவ்வாறு நிறைவேறிற்று? என்பனவாதி விஷயங்களையெல்லாம்விவரிக்கவேண்டுமாயின், அதற்காக ஒரு தனிக்கதை எழுதவேண்டும். நான் இங்கே விரித்

துரைக்கவேண்டியது என் சரிதந்தான். என் தந்தையின் சரிதமல்ல. மங்கலமாகக் கதையைத் தொடங்குவதற்காக அவர் விவாகத்தை முதலிற் சொன்னேன். அவ்விவாகத்திற்குமுன்பு நிகழ்ந்த சம்பவங்களை உணர்த்துவது இக் கதையைச் சார்ந்த கடனன்று.

தக்ஷ ராஜனது புத்திரியாகிய சதிதேவியைப்போல், விவாகத்திற்குப் பிறகு, என் தாய் தன் காதலருக்காகத் தன் பெற்றோர்களைத் துறந்து தன் கணவருடன் வாழ்தலேதனக்கு மோக்ஷமெனக்கருதி, அவரது இல்லத்திற்கே வந்து விட்டாள். அவள் இவ்வாறு வந்தவுடனே, அவளது மாமனார் அவளைத் தன் மருகியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவள் வந்த மூன்றே மாதங்களில் அவளுடைய அபூர்வ குணாதிசயங்களினால் அவருடைய மனம் சற்று நெகிழ்ந்தது. ஆகையால் அவளிடமிருந்து ஒரே ஒரு வாக்குப் பெற்றுக்கொண்டு அவளைத் தன் மருமகளாக அங்கீகரித்தார். என் தாய் அவளுக்கு அளித்த வாக்கு என்ன? அவள் ஒருபோதும் எக்காரணத்தை முன்னிட்டும் தான் பிறந்த அகத்திற்கு அடியெடுத்து வைப்பதில்லை என்பதுதான். வேறொன்றுமில்லை. அவ் வாக்கையும் அவள் நிறைவேற்றினாள். இனி என் கதையைத் தொடங்குகின்றேன்.

என் தந்தையின் மணம் நிறைவேறிய முப்பத்திரண்டாம் மாதம் நான் இந்தவுலகத்தில் உதித்தேன். நான் பிறந்த மூன்றும் நாள் என்னை ஈன்றஅன்னை நீண்டநித்திரை புரிந்தனள். அப்பொழுதுதான் அவளுடைய தாய் தந்தையர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து என் அன்னையின் சடலத்தைப் பார்த்து உருகி அழுது மனமுழன்று பின்பு தங்கள் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

என் தந்தை என் அன்னையின்பாற் கொண்டிருந்த அன்பு அற்புதமானது. அவள் சென்றவுடனே அவருடையஉயிரிற் பாதியும் அவளோடு சென்றுவிட்டதென்னலாம். தான் இறப்பதற்கு முன்பு என் அன்னை அவரை நோக்கி, "வீணாக என்னை நினைத்து ஏங்கி ஏங்கி உருகாதேயுங்கள். குழந்தைக்காக உங்களைத் தேற்றிக்கொள்ளுங்கள். என் தங்கை ஆண்டாளைக் கலியாணஞ்செய்துகொள்ளுங்கள். வேறு ஒருத்தியும் குழந்தையைக் கவனிக்கமாட்டாள்" என்று சொன்னாள். இம் மொழிகளை என் தந்தை தன் உள்ளத்தில் ஆழப்பதித்துக் கொண்டனர். அடுத்தமாதத்திலே தன் புத்திரனுக்கு வேறொரு பெண்ணை மணஞ்செய்விக்க முயற்சித்தனர் என் பாட்டனார். அவர் பெருங்கோபி. வெறும்பிடிவாத குணமுள்ளவர். ஆனால் அவருடைய புத்திரனல்லவோ நந்தகோபாலர். பிதுரார்ஜிதமாக

அவருடைய பிடிவாத குணத்தை இவரும் கடைப்பிடித்திருந்தார். அன்றியும் தன் உயிரென மதித்திருந்த மனைவியைப்பிரிந்த ஏக்கத்தினால் அவர் சித்தமும் மிகக் கலக்கமுற்றிருந்தது. ஆகையால் என் தந்தை தைரியமாய்த் தன் தந்தையை நோக்கி, "நான் மனோன்மணியின் தங்கையையே கலியாணஞ் செய்துகொள்வேன். இதற்கு நீங்கள் சம்மதிக்காவிட்டால் சந்நியாசம் வாங்கிக்கொள்வேன்" என்றனர். என் பாட்டனாரா இந்தச் சபதத்திற்கு அஞ்சுகிறவர்! ஆகையால் அச் சபதத்தைப் புகன்ற நான்காம் நாள் என் தந்தை அகத்தைத் துறந்து திருவாவடுதுறைக்குச் சென்று விட்டார்.

இரண்டு மாதங்களாயின. என் பாட்டனாரும் திருவாவடு துறைக்குச் சென்றார். எதற்காக? சந்நியாசம் வாங்கிக்கொள்வதற்கன்று; தன் புத்திரனை அழைத்து வருவதற்காக. ஆண்டுத் தன் புத்திரனது சந்நியாசக் கோலத்தைக் கண்டு கண்ணீர் வடித்து விட்டனராம் என் பாட்டனார். அவர் கண்ணீரைக் கண்ணுற்று, என் தந்தையும் கண்ணீர் சிந்தினராம். என்ன மனஸ்தாப மிருந்தாலும் பெற்ற மனமல்லவா! ஆனால் மிகவும் அற்பமான ஒரு பிழைக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் தம் புத்திரர்களையும் புத்திரிகளையும் விஷமாக வெறுக்கும் பிசாசங்களாகிய பிதாக்களும் உளர். அந்தப் பிசாச வர்க்கத்திற் சேர்ந்தவரல்லர் என் பாட்டனார்.

"உன் னிஷ்டப்பிரகாரமே, கோபாலா! நீ ஆண்டாளையே கலியாணஞ் செய்துகொள். வீட்டுக்குவா. நமது குலம் தழைக்க வேண்டு மல்லவா! ஆனால் நானாகப்போய் அந்தப் பேய்களிடத்தில் பெண் கேட்க மாட்டேன். நீ மனோன்மணியைக் கலியாணஞ் செய்ததுபோல், இந்தப் பெண்ணையும் கலியாணஞ் செய்துகொண்டு வந்து விடு" என்றவாறு பற்பல விஷயங்களைத் தன் புத்திரனோடு பேசிவிட்டு என் பாட்டனார் எங்கள் நகரத்திற்கு மீண்டனர். பின்னர் என் பிதாவும் தன் சந்நியாசச் சின்னங்களைக் களைந்துவிட்டு மாப்பிள்ளையைப்போல் தன்னை அலங்கரித்துக்கொண்டு, தன் மாமனார் அகத்திற்குச் சென்றார். அம் மாமனார் தன் சம்பந்தியாகிய என் பாட்டனாரைத் தான் சத்துருவாகப் பாவித்தனர். என் தந்தையின்பால் அவருக்குப் பிரீதியுண்டு. ஆகையால் என் பிதா தன் வேட்டகத்தில் மெய்யன்போ டுபசரிக்கப்பெற்ற இரண்டு மூன்று தினத்திற்குப்பிறகு தன் கருத்தைத் தன் மாமனாருக்குத் தெரிவித்தார். அப்பொழுது என் தாயின் தந்தை அதற்கிணங்கவேயில்லை. ஆனால் சுமார் எழெட்டுத் தினங்களுக்குப் பிறகு சம்மதித்து விட்டார். அவ்வாறு சம்மதித்ததற்கு முக்கிய காரணம், அவர் புத்திரி ஆண்டாளம்மாள் தன்

தமக்கையின் கணவரையே தான் கலியாணஞ்செய்துகொள்வதாகத் தீர்மானித்து அழுதழுது தன் தந்தையின் மனத்தைக் கரைத்ததுதான்.

ஆண்டாளம்மாளுக்கும் என் தந்தைக்கும் விவாகம்நிறைவேறிற்று. சுமார் இரண்டரை மாதங்களுக்குப் பிறகு, என் தந்தை, தன் மனைவியை அழைத்துக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டார். என் பாட்டனார் இந்தப் புது மருமகளிடமிருந்து யாதொரு வாக்குத்தத்தமும் பெற்றுக் கொள்ளாமலே இவளைத் தம் மருகியாக அங்கீகரித்துக்கொண்டார். இந்த அம்மாளும் தன் தாய்வீடுபோய் வருவதைத் தவிர, மற்றெல்லா விஷயங்களிலும் தன் தமக்கையைப் போலவே ஒழுகினாள். இந்த ஆண்டாளம்மாள்தான் நானறிந்த தாய். இவளையே இனி "என்தாய் என் தாய்" என்று கதை முழுவதுங் கூறுவேன். என் தாயாகிய இந்த அம்மாள் என்னை வளர்த்ததுபோல், அன்போடும் ஆதரவோடும் எந்தத் தாயும் தன் சொந்தக் குழந்தையைக்கூட வளர்த்திராள். இந்தத் தாய் தான் என்னை அநேகமுறை மார்போடணைத்துத் தாலாட்டினவள். இந்த அன்னைதான் எனக்கு வேளைக்குப் பாலூட்டி வளர்த்தவள். இந்த அன்னைதான் எனக்கு ஸ்நானம் செய்வித்து மருந்துபுகட்டித் தலைசீவிப் பொட்டிட்டு மையிட்டு என்னை அலங்கரித்துப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தவள். நான் பிறந்த பதின்மூன்றும் மாதம் பெரியம்மை என்ற கொடிய வைசூரியால் உபாதிக்கப்பட்டிருந்தபொழுது, இரவையெல்லாம் பகலாகப் பாவித்து விழித்திருந்து துளி துளியாகக் கண்ணீர் வடித்து, தன் மென்மைவாய்ந்த கரங்களும் மடியுமே எனது பஞ்சணையாக அமைத்துப் பத்துப் பதினைந்து நாட்களாக என்னைத் தாங்கிக்கொண்டேயிருந்து என் சௌக்கியத்துக்காக உள்ளமுளைந்து உருகிக் கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தவள் இந்த அன்னைதான். நான் உட்காரப் பழகியதை நடக்கப் பழகியதைக் கண்டும் என் மழலைச் சொற்களைக் கேட்டும் பேரானந்த மடைந்தவள் இந்த அன்னைதான். எனக்கு ஒரு வயது பூர்த்தியாயினபின், என் முதற் பிறந்தநாளன்று எனக்கு "ஜனகராஜன்" என்ற பெயரிடவேண்டுமென்று சொல்லி யாவரையும் அதற்கிணங்கச் செய்து எனக்கு அப்பெயரிட்டு உவகை யுற்றவள் இந்த அன்னைதான். (நான் பிறந்த மூன்றும் நாள் என்னைப் பெற்றதாய் இறந்து விட்டதால் நான் உயிரோடிருப்பேனே என்னவோ என்ற சந்தேகத்தால் நெடுநாள் எனக்குப் பெயரிடவில்லை.) நான் பேசத்தொடங்கியபோது, எனக்குப் பல அழகான பாட்டுகள் பாடக்கற்றுக்கொடுத்து, நான் பாடக்கேட்டு மகிழ்ந்தவள் இந்த அன்னைதான். எனக்கு அ, ஆ முதலிய அட்சரங்களை முதன் முதல் கற்றுக்கொடுத்து எனது நான்காம் பருவம் பூர்த்தியாகும்முன்னர்

பதங்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும் சக்தியை எனக்கு அளித்து மகிழ்ந்தவள் இந்த அன்னைதான். ஐயோ அம்மா! இவைகளையெல்லாம் இப்பொழுது நினைத்தமாத்திரத்திலேயே உள்ளப்பதைப்பும் நெட்டுயிர்ப்பும் என்னைமீறிப் பொங்குகின்றனவே! என்செய்வேன்!.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

விழியால் மருட்டும் விலைமாதரும் வீணிற்கெடும் வாலிபரும்.

பாவங்கள் அநேகரூபமாயினும், கொலை, களவு, கள், காமம், பொய் இவ்வைந்துமே பஞ்சமகா பாவங்களெனவும், இவைகளே மானிடப் பிறவிக்கு வித்துக்களெனவும், வெம்மை கூர் நரகில் கொண்டுபோய் வீழ்த்தும் எனவும் விளக்கமாய் அறைந்துளார் ஆன்றோர். இவ்வாறு கூறிய அம்மேலோர் திருவாக்குகளைக் கொண்டு, செவிடன் காதினிற் சங்கு ஊதுவதுபோல, இடித்திடித்துக் கூறியவற்றினையோராது, பிரயாசையுடன் கற்றநூல்களைக் கைசோரவிட்டு, சில வாலிபச்சிறுவர், தம் செல்வச் செருக்கால் பாவிகள் சங்கத்திற்பட்டு, பாவமெனும் காமப்பேய்க்குட்பட்டு, முதலில் தேவாலயங்களில் நிகழும் உற்சவாதிகளைக் காணவே சாக்குப் போக்குகளிட்டு, பெற்றோர் கட்டளையை முற்றும் மீறிவிட்டு, தம் மனத்தைப் பிறவழிகளிற் செலவிடுத்து, முதலில் தாம் கோரிவந்த தேவதாபத்தியைக் கெடுத்து, அங்குத் தோன்றி நடஞ்செயுங் கணிகையர் குமரிகளை ஏறெடுத்து, தம்முடன் துணைவந்த சற்குண வாலிபரை விடுத்து, யாருந் துணையின்றிச் சத்திரங்களிற்படுத்து, கணிகையர் குமரிகளை நோக்கிய காட்சியாலிவர் நாக்கினில் நீர்தேக்கி, அவர்களோடுகலக்க மனம் போக்கி, மெள்ள மெள்ளப் பாவையருடன் சம்பாஷிக்கத் துவக்கி, அம்மாதர் காட்டும் மாயஜால வார்த்தைகளிற் சொக்கி, காமாந்தகாரனாய் இவர் மனம் முன்னே வழிகாட்ட இவர் பின்னே சென்று, பரத்தையர் குமரிகளைக் கைதொட்டு, அம் மடவார் காட்டும் தனமெனும் மலையேறிப்பார்த்து ஆழ்ந்த இருண்ட வாவியொன்று தன்முனந் தோன்ற அதிற்றலை தெரியாது காமசன்னதங் கொண்டு வீழ்ந்து, பாசபந்தமெனும் மாயவிருளி லகப்பட்டு, அப்பொது மகளிர் கன்னல்மொழி, அன்னநடை, பின்னல் ஜடை, அணியாடை

வேடத்தில் மதிமயங்கி, ஆரம்பத்தில் அவரில்லம்போகவர வெட்கப்பட்டு, பின் சிலநாள் போக்கி, மனந்தரியாது, மதன்போருக்காற்றாராகி, எம் சொந்தப் பணத்தால் காமத்திற் காசைச் செலவழிக்க எந்தப் பயத்தா லிந்தப் பயல்களுக்குப் பயப்படுவதென்று, பெற்றார், பிறந்தார், பெரு நாட்டார், உற்றார், உகந்தார் உறவும்விட்டு, வெட்கங்கெட்டு, திடப்பட்டு, காசைக் கண்டபடி வாரியிறைத்து, மூலதனமும் முட்டிடக் கடன் வாங்கிட, வட்டிமேலிட, ஆடை, அணி, ஆடு, மாடு, நிலம், வீடு முதலிய வற்றைப் பத்துக்கொன்றாக விற்றுக்கொடுத்திட, காம விலாச மோக வானந்த வாரிதியிற் குளித்திட, கவலையிலாது தம்முடம்பைக் காதல் வியாதியாற் கெடுத்திட, பகலிரவெனும் பேதமிலா தோடிக்கெட்டு, மஞ்சள் அரைத்தல், பாவாடை தோய்த்தல் முதலிய பணிவிடைகளைத் தாமேசெய்து, உயர்தர ஆடையணிகளைத் தாமே புனைந்து, தம்முகங் குளிர முகமலரச் சிங்காரித்து, மெய்க்காவலராய்க் கூடவேபோந்து, கோயிற் பணிவிடைகளைத் தாமும் புரியநேர்ந்து, போம்போது கூடவே சென்று கைலாகு தந்து, அழைத்து அவரில்லம்சென்று, எந்தாயே! நீயே கதியெனப்பணியும் காமாதுரர், முன்னமிருந்த செல்வச் செருக்கை விட்டு, எண்ணங்கழலக் கண்ணுஞ்சுழல ஏதுமிலாத பாவியாய், வீதியில் பாதசாரியாய்ப்போக நோக்கிய அவ்வன் மனம்பூண்ட வேசையர், தூ! தூ! எனக்காறியுமிழ, வீதியிற்றிரிந்து, நல்லாரேசப் பொல்லார் பேச, கொண்டாள் மனங் கொதிக்க, கண்டார் மனம் பாதவிக்க, வாதாடிச் சூதாடி வாங்கியகடனைத் தரவழியிலாது, புலையன்போலக் கொலைகள் புரிந்து, எல்லாப் பாதக வல்லோனுகச் செய்யும் இக்கொடிய விபத்துக் களுக்கு ஆளாகின்றனர். இத்தகைய விபத்துக்களுக்குக் காரணம் காமம் என்பதை முற்றுமறிந்தன்றோ, இத்தகைய அறிவிலிகட்கு வற்புறுத்தும் வண்ணம் பற்பல நீதிநூல்களிற் புத்தி புகட்டி யிருக்கின்றனர்.

“ கன்னியரைப் பொன்னுண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப் பரத்தையரை— யுன்னரிய
தாதியர்க டம்மைத் தழுவினை யார்நரகத்
தீதுவரு மென்றே தெரிந்து. ”

எனத் தெற்றென விளக்கிக் கூறியதை யோர்ந்தும், இத்தகைய தீச்செயற்குட்பட்டுத்தியங்கும் தீயர்கள் செய்கைகளையுற்று நோக்கிடில், அந்தோ! உருகுது எம்முள்ளம்! பரிதாபம்! பரிதாபத்தினுமிகப் பரிதாபம்!!

அன்றியும்,எல்லிற்கங்குற் பொழுதறுகாலத்தும் என்றும் பூசனை விடாது செய்து தொழுத கைகள் தலைமேலேறத் துளும்பும் ஆநந்தக்

கண்ணீருண் மூழ்கி, அழுது அரனடிசேர்ந்த ஸ்ரீ மணிவாசப்பெருமானும் மேற்காட்டிய பேதைகட்கிரங்கியே அன்னூர் கடைத்தேறும் வண்ணம்,

"வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளா வாழ்கின்றாயே."

என்று திருவாசகமென்னும் திராவிடவேதத்தில் திருவுளமுவந்து திருவாய்மலர்ந்திருக்கின்றனர்.

பிரியவசனன்.

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

௩. காந்தருவ தத்தையா ரிலம்பகம்.

(வெண்டாமரை ௩, 19-வது பக்கத் தொடர்ச்சி.)

அங்ஙனம் கூறக்கேட்டு வெறுத்துப்பேசிய தன் மனைவியாகிய தாரணிக்கு, கலுழவேகன் தேறுதல் கூறுகின்றான்:

32. முனிவ்ரும் போக பூமிப் போகமுட் டாது பெற்றுந்
தனிமைய ராகி வாழ்தல் சாதுய ரதனி னில்லை
கனிபடு கிளவி யார்தங் காதலன் கவானிற் றுஞ்சிற்
பனியிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னான்.

நமது மகள் இந்நாளளவும் சாந்துயரெய்திநிற்கவும் ஒருவன் பகுதியிலே படுங்காலம் வாராமையினாலே, சோதிடநூலில் வல்ல நிமித்தி

---

32. இனிமை பொருந்திய சொற்களையுடைய மகளிர், வெறுத்தற்கரிய இப்போக பூமியில் இன்பத்தைக் குறையாமற் பெற்றுவைத்தும், தங் கணவனோடன்றித் தனித்து வாழ்கின்ற அதனைக் காட்டிலும் அவருக்கு இறந்துபடும் வருத்தம் வேறில்லை. அவர் தங் கணவனது தொடையிலே தூங்கப்பெற்றால் அவ்வின்பம் குளிர்ச்சி பொருந்திய பெரிய தேவலோகத்திலுள்ள தேவர்கள் இன்பத்தின் பகுதியையுடையது என்று சொன்னான்.

போகபூமி—நல்வினைப்பயனை யனுபவிக்கும் பூமி. சாதுயர்-வினைத்தொகை. கவான்—தொடை.

43

கன் கூறின நூல் வழியிலே சென்று, அரசர் விரும்பிக் கேட்கினும் அவர்கட்குக் கொடுக்க உடன்பட்டேனில்லை; இப்போது "சேற்கடை மதர்வை நோக்கிற் சில்லரித்தடங்கண் நங்கை" ஒருவன்பாற் படுங்காலம் வந்தால் அவ்விதியை யாவர் விலக்கவல்லவர்? ஆதலின் அவளை மணம் செய்து கொடுத்தற்கு ஒருப்பட்டேனென்றும் உரைத்தனன்.

அதுகேட்டு மனம் தேறுதலுற்ற தாரணி, தன் மகளினது தம்மை நீங்குதலாலுண்டான வருத்தத்தைப்போக்கி, அவளுக்குத் தான் கொடுத்தற்குரிய பொருளனைத்தும் கொடுத்தபின்னர், அரசனும், மகள் வேண்டுவன வற்றையெல்லாம் வெறுப்பக்கொடுத்து, அவளது உயிர்த்தோழியாகிய வீணாபதி யென்னும் பேடியை நோக்கி, இது கூறுகின்றான்:

"உடம்போடு உயிர் பின்னுமாறுபோற் பின்னி ஓரிடத்தும் இவளை விட்டு நீங்காத பெண்ணே! உனது தத்தை, எம்மைப் பிரிந்த தனிமைபோம்படி, நீ இவளுக்குத் தந்தையும் தாயுமாவாயாக; இனி நீங்களிருவரும் நம்முடைய ஆணையை விட்டு, அடங்கலர் அட்டவேலான் ஸ்ரீதத்தனது ஆணையின்படி நடப்பீராக" என்று கழறினன் கலுழவேகன்.

பின்னர், காதல் மிக்க ஐவகைத் தாயரும் பலதாமும் தழுவிக் கொள்ள, திருமகளைப் போகவிட்ட செம்பொற் றாமரைபோன்று, தானிருந்தமனை பொலிவிழக்கும்படி அதனை விட்டுச் சென்ற காந்தருவதத்தை,

33. காம்புபொன் செய்த பிச்சங் கதிர்மணிக் குடையோ டேந்தித்
தாம்பலர் கவரி வீசக் கிண்கிணி ததும்ப நாகப்
பாம்புபைத் தனைய வல்குற் பல்கலை மிழற்ற வேகி
யாம்பனா றமுதச் செவ்வா யரசனைத் தொழுது நின்றாள்.

தன்னடியிலே வீழ்ந்து வணங்கிய தத்தையை, அரசன் அவள் பிரிவைப் பொறுக்கமாட்டாமல் அடுத்தடுத்துத் தழுவிக்கொண்டு, அவள்

---

33. ஆம்பல் மலர்போல மணக்கின்ற அமுத மூறுகின்ற செவ்வாயினையுடைய தத்தை, பலர், பொன்னாற் காம்பியற்றிய பீலிக் குஞ்சத்தையும், ஒளிபொருந்திய அழகிய குடையையும் ஏந்தவும், சாமரை வீசவும், காற் சதங்கை யொலிக்கவும், நாகமென்னும் பாம்பு படம்விரித்தாற்போன்ற அல்குலைச் சூழ்ந்த பல கோவைகளையுடைய மேகலைகள் ஒலிக்கவும், தாய்மாரிடத்தினின்றும் போய்த் தந்தையைத் தொழுது நின்றாள்.

ஏந்தி – ஏந்த. நாறுதல் – தோற்றுதலுமாம்.

வருத்தமும் அவள் தாயின் வருத்தமும் நீங்கும்படி, "வலம்புரிச்சங்கு பெற்ற முத்தானது உலகத்தவர்க்குப் பயன்கொடுப்ப தல்லாமல் அதனால் அவ்வலம்புரி பயனடையாது; பெண்களும் தாயருக்கு அத்தன்மையரே" என்று கூறிவிடுத்தான்.

பின்னர், தளிரியல் தத்தை, வீணைகளோடு தன்னால் வளர்க்கப் பட்ட மான்களும் மயில்களும் அன்னங்களும் கிளிகளும் கருங்குரங்கு களும் பெண் குரங்குகளும் சித்திரப் புறாக்களும் தன் பக்கத்தே சூழ்ந்து வரப்போய் விமானத்தைச் சேர்ந்தாள். விமானம் பெருஞ் சேனையோடு கடலில் மரக்கலம் இருக்குமிடத்தே விரைந்து சென்றது.

அப்பொழுது வித்தியாதரனான தரன், ஸ்ரீதத்தனை நோக்கிச் செப்புகின்றான்: "அன்பனே! காந்தர்வதத்தையின் அழகு முதலிய நன்மையினாலே அவளை மணம் செய்தற்கு வெள்ளி மலையிலே வேந்தர் பலர் வந்து சேர்ந்தார்கள்; அது கண்டு கலுழவேகனுடைய நிமித்திகன், "தத்தையினுடைய வாழ்க்கை பூமியினிடத்தே யாதலால் அவளைக் கொண்டுபோதற்கு நின்தோழன் கடலினிடத்தேயிருக்கின்றான்; அவனை யழைப்பி" என்று கூறினன். அது கேட்ட அரசன், "எனது நண்ப னைக் கொணர்வாயாக" என்று என்னை நோக்கிச் சொல்ல, யான் அன் றைக்கு வந்த செய்தி வஞ்சனைகாண்" என்று கூறி, "துன்பமுற்றவர்க் கல்லால் இன்பமில்லையென உயர்ந்தோர் கூறுவாராதலின், யான் நின்னை யொழிந்தவர்க்கு இன்பம் செய்து உன்னை யொருவனையே துன்பத்தாற் கட்டினேன்; யான் அங்ஙனம் துன்பம் செய்து நினது நட்பைப் பெற் றேன்; இனி நீ வாழ்வாயாக" என்று உபசாரம் சொல்லி, மரக்கலத்தி னிட முழுவதும் வெள்ளி மலையினின்றுங் கொணர்ந்த பலவகைப்பட்ட இரத்தினங்களை நிறைத்து, ஸ்ரீதத்தன் உள்ளத்திற் களிப்பு மிகுந்து ஒழுகும்படி, கடலிலே அவனுக்கு அமிழ்ந்துவிட்டதுபோலத் தோற்று வித்த மரக்கலத்தையும் அதிலுள்ள நண்பர்களையும் சுட்டிக் காண்பித் தான்.

இங்ஙனம் கூறிய தரனது சொல்லாலே ஸ்ரீதத்தன் உள்ளங் குளிர்ந்து, "கலுழவேகன் தந்த இத்தன்மைத்தான துன்பம் என் குடி யுள்ளவரையும் நடப்பதாக" என்று மகிழ்ந்து கூறிச் செலவு பெற்றுக் கொண்டு, தன் மரக்கலத்தில் தனது தோழர்களைக் கண்டு, உள்ளத்தில் அன்பு பொங்க, தார்குழையைப் புல்லி, கடலிலே தான் அடைந்ததெல் லாம் சொன்ன வளவிலே, அவர்கள், "நாங்கள் கண்டது நாடகம், இது கண்டோமில்லை" என்று கைதட்டிச் சிரித்தார்கள், தரன் இவர்கட்கு இங்ஙனம் நிருமித்தானாதலின்.

ஸ்ரீதத்தன், தீப்பட்ட புண்ணிலே அருவிநீரும் சந்தனமும் பட்டதுபோன்று, பரிவு தீர்ந்து தனக்கினியவ ரனைவரும் தன்னைச் சூழ மகிழ்ந்து தத்தையோடே இராசமாபுரம் சேர்ந்து தனது வீட்டிற் புகுந்தவன், தனது மனைவியிருக்கின்ற இடத்தைச் சேர்ந்த வளவிலே, அவள் செம்பொற் கொடியென வந்து வணங்கி நிற்க, அவளை "வருமுலை பொதிர்ப்ப வாங்கி வண்டின மிரியப் புல்லி" அம் மடந்தையினிடத்துப் பொருந்திய வருத்தத்தைப் போக்கினன்.

34. சந்திர காந்த மென்னுந் தண்மணி நிலத்தி னங்கண்
வெந்தெரி பசும்பொன் வெள்ளி பளிங்கொடு பவளம் பாய்த்திக்
கந்தெரி மணியிற் செய்த கன்னியா மாட மெய்திப்
பைந்தொடிப் பாவை யொன்றும் பரிவிலள் வைகி னளே.

பின்னர், ஸ்ரீதத்தன், காந்தர்வதத்தையினது வரலாற்றையும், அவளது தந்தை, "இசையில் இவளை வெல்வான் யாவனே அவனுக்கு இவளை மணம்புரிவி" என்று சொல்லியதையும் தன் மனைவியாகிய பதுமைக்குப் பகர்ந்து, அவள் அதற்கு உடன்பட,

"தெண்கட லமிர்தம் பெய்த செப்பெனச் செறிந்து வீங்கிப்
பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுற முலையினளை"

நாளைக்கே மணவினை முடிப்பேன் என்று வழுத்தினன்.

(வரும்.)

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்.

(இவ் வுபநிடதத்திலுள்ள அநேக விஷயங்கள் சற்குருமுகமாகத் தெரிந்துகொள்ளத் தக்கவை. ஆதலின், தத்துவமுணர்ந்த பெரியாரை

---

34. பசிய பொற்றொடியையுடைய தத்தை, சந்திரகாந்தமென்னும் குளிர்ந்த மணிகளாற் செய்த நிலத்தினிடத்தே, புடமிட்டு விளங்குகின்ற பசும்பொன்னால் சுவரமைத்து, ஒளிர்கின்ற மாணிக்கத்தால் தூண்கள் நாட்டி, பளிக்குக்கை யலகோடே பவழத்தைப் பூட்டாகப் பரப்பி, வெள்ளியாலே வேய்ந்து செய்த கன்னியாமாடத்தைச் சேர்ந்து சிறிதும் வருத்தமில்லாமல் இருந்தாள்.

சந்திரகாந்தம் – சந்திரன் முன் நீர்காலுங்கல், ஓடவைத்தல் – புடமிடுதல். வேய்தல் – மூடுதல்.

யிடுத்து வழிபட்டு, அநாயாசமாய்ச் சந்தேக விபரீதங்களை நிவர்த்தித்துக் கொள்க.)

பூர்ணமத: ... ... ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

முதலாவது அத்தியாயம்.

1. மனோகரமான அயோத்திநகரத்திலே மணிகளிழைத்தமண்டபத்திலே, நித்யானபாயினியான சீதாதேவியோடும், பரத லக்ஷ்மண சத்ருக்னர்களோடும் கூடியிருப்பவரும், சனகர் முதலான முனிகணங்களாலும் வசிஷ்டர் முதலிய குருக்களாலும், சுகர்முதலிய பரமஹம்ஸர்களாலும், மற்றும் பாகவதோத்தமர்களாலும் இரவும் பகலும் தோத்திரம் பண்ணப்பட்டவரும், காமக்குரோதாதி நானாவித விகாரங்களுக்குச் சாக்ஷியானவரும்,இயற்கையில் ஜன்மாதி விகாரமில்லாதவரும்,ஸ்வஸ்வரூபானுசந்தானத்தில் ஆசக்தியுடையவரும், தம் சந்நிதான மாத்திரத்தால் அன்பர்களது துன்பங்களை யழிப்பவருமாகிய ஸ்ரீராமரை, ஸ்வரூபானுசந்தானரூபமான சமாதியினின்று எழுந்தசமயத்தில், வாயுகுமாரரான ஆஞ்சனேயர், பக்தியினாலும் சேவையினாலும் தோத்திரம் செய்யாநின்று வினவினர்.

பூர்வோக்த விசேஷண விசிஷ்டரான ஸ்ரீராமரைநோக்கி, பக்தி சுசுரூஷையாதிகளால் தோத்திரம்செய்து ஆஞ்சனேயர் இங்ஙனம் வினவினரென்க.

2. ஏ ராமசந்திர! நீ பரமாத்ம ஸ்வரூபனாயிருக்கின்றாய், ஆதலின் சச்சிதாநந்த ஸ்வரூபனாகின்றாய்.

நீ யாவருக்கும் சாதாரணமாக மனிதனாகக் காணப்பட்டாலும், பரமார்த்தமாகப் பார்க்குமிடத்து,சச்சிதாநந்த ஸ்வரூபமான பரப்பிரம்மமே யென்றாரென்க.

3. ஏ ராம! ஏ ரகுசிரேஷ்ட! இப்போது உன்னை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன்; உனது ஸ்வரூபத்தை, தத்வசாஸ்திர சாம்பிரதாயமாக முக்தியின்பொருட்டுத் தெரிந்துகொள்வதற்கு விரும்புகின்றேன்.

ஏ ராம! உனது நிஜஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி உனக்கு வந்தனம் செய்கின்றேன் என்றாரென்க.

4. ஆயாசமற்ற எந்த ஞானத்தினால் யான் சம்சாரபந்தத்தினால் விடப்படுவேனோ, எந்த ஞானத்தால் யான் முக்தனாகின்றேனோ அந்த ஞானத்தை, ஏ ராம! கிருபையினால் எனக்குச் சொல்வாயாக.

சிரமமில்லாமல் எத்தகைய ஞானத்தினுல் நான் சம்சார பந்தத்தினின்றும் நீங்குவேனே அத்தகைய ஞானத்தை யெனக்குச் சொல்ல வேண்டும் என்ருரென்க.

(ஸ்ரீராமர் கூறுகின்ருர்.)

5. மிகப் பராக்கிரமசாலியான ஏ ஆஞ்சனேயா! நன்ருகக் கேட்கப்பட்டது. தத்வசாம்பிரதாயமாகச் சொல்லுகிறேன், கேள். நான் வேதாந்தத்தில்(ஞானகாண்டத்தில்)ஸ்திரனுயிருக்கின்றேன். (வேதாந்தங்களால் பிரதிபாதிக்கப் படுகின்றவனென்றபடி) நீயும் வேதாந்தத்தையே நன்ருக ஆசிரயிப்பாயாக.

பிரம்ம சாக்ஷாத்கார ஞானத்திற்கு வேதாந்தங்கள் முக்கிய சாதனமாகையினுலே நீ உபநிஷத் ப்ரதிபாத்ய ஞானத்தை மாத்திரமே ஆசிரயிப்பா யென்று ஸ்ரீராமர் சொன்ஞரென்க.

(அநுமான் கேட்கின்ருர்.)

6. ஏ ரகுசிரேஷ்ட! வேதாந்தங்கள் எவை? அவை எங்கேயுள்ளன? சொல்லுக.

வேதாந்தங்களென்பவை எவை? அவை எங்கிருக்கின்றன? எனக் கேட்டனரென்க.

(ஸ்ரீராமர் சொல்லுகிருர்.)

7. ஏ அநுமான்! பிரத்தியக்ஷமாக வேதாந்தத்தின் இருக்கையைச் சொல்லுகின்றேன், கேள்.

வேதாந்தங்களிருக்கும் பிரதேசங்களைச் செப்புகின்றேன், கேள் என்ருரென்க.

8. நாராயணனுகிய எனக்கு நிசுவாசங்களான வேதங்கள் மிக்க விஸ்தாரமாகப் பிறந்தவை. எள்ளினிடத்து எண்ணெய்போல வேதங்களில் வேதாந்தமானது நன்ருக ஸ்தாபிக்கப்பட்டது.

வேதங்களெல்லாம் என்னுல் நிசுவாசரூபமாகப் பிறந்தவை. அந்த வேதங்களில் வேதாந்தங்கள் எள்ளி லெண்ணெய்போல் சாரமாக வுள்ளவை யென்ருரென்க

(வரும்.)

ஓர் ஆரியன்.

48

சுவிவேக தர்ப்பணம்.

(ஸ்ரீ சாந்தானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்

ஆந்திர பாஷையில் அருளியது.)

(வெண்டாமரை க, ஜூலை மீ 22-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இந்தத் திருஷ்டாந்தத்தை வேறொரு விதமாக யோசிப்பாம். ரஜ்ஜுவி (கயிற்றி) னிடத்துத் தோன்றும் சர்ப்பம் சத்தா? அசத்தா? என்னும் பிரசினைகளுக்கு, சத்தென்று சொல்லின், ரஜ்ஜுவென்றறிந்த போதும் சர்ப்பம் தோற்றவேண்டும்; தோற்றவில்லையாதலின் சத்தெனல் கூடாது. அசத்தென்று சொல்வோமெனின், வந்தியா புத்திரனைப் போலத் தோற்றாமலே யிருத்தல்வேண்டும்; தோற்றுதலினால் அசத் தென்று சொல்லத்தகாது. சதசத்தென்று சொல்லத்தகாதாவெனின், விருத்தமான இரண்டு தர்மங்கள் ஒன்றினிடத்தே யிராதாதலின், சர்ப்பம் சதசத் விலக்ஷணமென்றே சொல்லவேண்டும். (அதாவது இப்படிப்பட்ட இலக்கணத்தை யுடையதென்று சொல்லுதற் கிடந்தராத அநிர்வசனீய மென்றே சொல்லவேண்டுமென்றபடி.)

இப்படியே உலகமும் சிதசத் விலக்ஷண அநிர்வசனீயமாம். அசத் தென்று சொன்னது, உலகம் சத்தென்பவர்களுக்குச் சத்தல்லவென்று சொல்வதற்கு மாத்திரமே யன்றி வேறன்று. வந்தியா புத்திரன் மித் தையே. ஆகாச தாமரை மித்தையே. ரஜ்ஜு சர்ப்பம் மித்தையே. கானல்நீர் மித்தையே. சொப்பனப் பிரபஞ்சம் மித்தையே. "கிம் மித்யா யத்வித்யா நாஸ்யந்து" வித்தையினால் நாசமாக்கப்படுவதெதுவோ அது மித்தை. இங்ஙனம் கூறுவதில் அநேக பேதங்கள் உள்ளன. ஒவ் வொரு சமயங்களிலே ஒவ்வொரு திருஷ்டாந்தம் உபயோகப்படும். அவ்வவ் விடங்களில் வேறு வேறு திருஷ்டாந்தங்கள் கொடுப்பதினால் விரோதம் சம்பவிக்குமெனின், அது அவரவர்கள் மனப் பரிபாகத்தை யனுசரித்திருக்கும். அவை யனைத்தும் அவசர பேதமாக உதகரிக்கப் பட்டவை.

உலகம் ஒன்றே யுள்ளது, அது நசிப்பதில்லை யென்பவரை நோக்கி, "ஐயா! உலகம் காரியமேயல்லது காரணமன்று; காரணமானது எல்லா வற்றிலும் நிறைந்துள்ள பாதத்வமேயாகும்; அதெங்ஙனமெனின், தாயின் கருப்பத்தினின்றும் சிசு எப்படி யுற்பவித்ததோ அப்படியே பாதத்வத்தினின்றும் உலகம் தோன்றினது" என்று பெரியோர்

போதிக்க, அப்போது மனப் பரிபாகமுடையவர்களாய் இப்படிச் சங்கிக் கின்றார்கள்:

"தாயின் கருப்பத்திலிருந்து பிறந்த சிசுவைப்போல, பரமாத்மாவி னிடத்திலிருந்து உலகம் தோன்றினதெனின், தாயும் சிசுவும் வேறு வேறு பொருள்கள்; அதுவுமன்றி இரண்டும் கண்டப் பொருள்கள். இவ் வுபமானத்தின்படி உபமேயத்தைப் பார்க்கும்போது, பரமாத்மாவும் கண்ட வஸ்து, உலகமும் கண்ட வஸ்துவாகின்றது. இதை யங்கீகரித்த பக்ஷத்தில்,

"பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதஞ்ச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே"

"யச்சகிஞ்சிஜ் ஜகத்ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபிவா
அந்தர்ப் பஹிஸ்சதத் ஸர்வம் வ்யாப்யநா ராயணஸ்தித:"

"போக்தா போக்யம் ப்ரேரிதாரம்சமத்வா
ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்"

"வாஸுதேவஸ் ஸர்வமிதி" பரமாத்மா பரிபூர்ணமென்று கோஷிக்கும் இத்யாதி சுருதி ஸ்மிருதிகட்கு வையர்த்தம் சம்பவிக்கின் றதே"

"ஐயா! உலகமே சத்யமென்றும் அதற்குக் காரணம் வேறொன் றில்லையென்றும் சொல்பவர்களுக்கு, காரணம் ஒன்றிருக்கிறதென்று போதிப்பதற்காக இவ் வுபமானம் சொல்லப்பட்டது; அதுவே சித்தாந்த மன்று. பால் தயிராவதுபோல, பரிணமவாத காரணத்தை யங்கீகரிப் பாய்; அதில் சிசு வேறு தாய் வேறு என்றதனால் பரமாத்மா பரிபூர்ண மென்று கோஷிக்கும் சுருதி ஸ்மிருதிகட்கு விரோதார்த்தம் வருமென் றனையே, அவ்வித தோஷம் இதிலிராது. இவ் வுபமானத்திற்கு உப மேயம் பரமாத்மாவே யுலகமாம்"

"ஐயா! பரமாத்மா பரிபூர்ண னென்பதற்கு எத்தோஷமு மில்லா மற்போயினும் வேறு பெருந் தோஷம் சம்பவிக்கின்றது. அஃதெத் வெனின், பாலே தயிராவதில் பால் கெட்டுத் தயிராகின்றது. இவ் வுபமா னத்தின்படி பரமாத்மா கெட்டு உலகமாகின்றது. அம்மட்டோடு போகா மல் பால் கெட்டுத் தயிராவதினாலே தயிர் அதே யுருவத்தோடிராது, அது கெட்டு மோராகி, அது கெட்டு வேறாகி, கடைசியில் இன்ன நிலைமையி லிருக்கிறதெனற்கு இடமில்லாமற் போகின்றது. அப்படியே பரமாத்மா கெட்டு உலகமாகி, அது கெட்டு வேறாகி, அது கெட்டு வேறாகி முடிவில் இப் பரமாத்மா இப்படி யிருக்கிறதெனற்கு இடமில்லாமற் போகு மல்லவா?"

50

"அது நிச்சயமே. பரமாத்மா பரிபூர்ணனெனற்குத் தோஷம் சம்பவிக்காமலிருப்பதற்கு மாத்திரமும், வஸ்துக்கள் இரண்டல்லவென்பதற்கு மாத்திரமும் பால் தயிர் உபமானம் சொல்லியதேயன்றி அது சித்தாந்தமன்று. மண்ணும் கடமும்போல் காரணகாரியங்கள். இதில் மண் கெடாமலே கடாகாரத்தை யடைந்தாற்போல, பரவஸ்து கெடாமலே உலகமாகின்றது."

"இதிலும் தோஷமில்லாமற் போகவில்லை. மண் விகாரப்பட்டேயன்றோ கடமாகின்றது? அப்படியே பரவஸ்து விகாரப்பட்டேயன்றோ உலகத்தினுருவ மடையவேண்டும்? நிர்விகாரமான பரவஸ்துவிற்கு விகாரம் கற்பித்தல் நியாயமல்லவே."

"உண்மையே. பால் கெட்டுத் தயிராவதுபோல மண் கெட்டுக் கடமாவதில்லை யென்பதற்கும், தயிர் மறுபடி பாலாகாமற் போவதுபோலல்லாமல் கடம் பின்னரும் மண்ணாகுமென்பதற்கும் இவ் வுபமானமேயன்றி வேறு விஷயத்திற்கன்று. இப்படி விகாரப்படாத உபமானம் சொல்லுகிறேன்: சூரியனும் அவனது பிரதி பிம்பமும்போலும்; சூரியன் விகாரப்படாமலே எப்படிப் பிரதிபலிக்குமோ அப்படிப் பரவஸ்து எவ் விகாரமும் அடையாமலே பிரதிபலிக்கின்றது."

"இதிலேயும் தோஷமில்லாமற் போகவில்லை. பிம்பம் பிரதி பிம்பிப்பதற்கு ஆதாரமாக ஒரு வஸ்து வேண்டும். சூரியன் பிரதிபிம்பிப்பதற்கு ஜலம் எப்படி யாதாரமோ அப்படிப் பரவஸ்து பிரதிபிம்பிப்பதற்கு ஆதாரமொன்றிருத்தல்வேண்டும். எது வேறொரு ஆதாரத்தில் பிரதிபிம்பிக்குமோ அது அபரிபூர்ண வஸ்துவாக இருக்கவேண்டுமேயன்றி யொருபோதும் பரிபூர்ண வஸ்துவாகாது. ஜலத்தினிடத்துப் பிரதிபிம்பிக்கும் சூரியனும், கண்ணாடியில் பிரதிபிம்பிக்கும் முகமும் பரிபூர்ண வஸ்துவாகுமா? சூரியனும் நமது முகமும் ஓரிடத்திலும், ஜலமும் கண்ணாடியும் மற்றோரிடத்திலும் இருத்தலினாலே பிம்பப் பிரதிபிம்ப உபமானம் அபரிபூர்ண வஸ்துவிற்கே லப்யமாகும். இவ் வுபமானத்தின்படி பரமாத்மா அபரிபூர்ண வஸ்துவாகின்றதே."

(தொடரும்.)

பத்திராதிபர்.

51

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

.பி. சுப்பருய், ஆயுர்வேத

ஔ ஷ த சா லை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

2. அக்கினிமாந்தத்திற்கு மருந்து :— பசியின்மை, எப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களைச் சொஸ்தப்படுத்தும். பசிதீபனமும், தேகாரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:— எந்தக் காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர்தாரை எரிவு, சீழ் இரத்தம்வடிதல் முதலிய வியாதிகளையும் ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5. பிரத்தியேகம்.

4. லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்தவஸ்து. தந்தரோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொற்ற கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன்

வாயில் அநேகமணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினக் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினுலுண்டாகும் வயிற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உடயோகித்துவந்தால் ஜன்னி கிட்டநாடாது. ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனை திரவியங்களுஞ் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைகற்பூரம் முதலிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனுவசியம். அரைக்குழந்தைகள் முதல் வயதுசென்றவர்களுக்குச் சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்குந் தேகத்துக்குந் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச் சுகமாகும். சீசா 1-க்கு விலை அணு 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால் சார்ஜ் அணு 5. சிலோனுக்கு அணு 7 பிரத்தியேகம்.

5. சர்வநோய் சம்ஹாரன்:—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம் மார்பு நோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், சூதக வலி, பார்சவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லாநோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

53

சோதிட விளம்பரம்.

ஆரிய நேயர்காள்!

தங்கட்கு ஜாதகங்களின் குறிப்பெழுத வேண்டினும், (அல்லது) பலனெழுத வேண்டினும், ஆலயம், மனை முதலியவைகளுக்குப் பொருத்தபலன் எடுத்தெழுத வேண்டினும், புத்திர தோஷ நிவர்த்திக்கு (கர்மநாடிப்படி) தோஷநிவர்த்தி சாந்தி விதிகள் எடுத்தெழுத வேண்டினும், (அல்லது) நஷ்டஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும் அடியிற் குறித்த விடத்திற் கெழுதி விபரம் தெரிந்துகொள்ளலாம். விபரம் அறிய விரும்புவோர் ரிப்ளை கார்டு அல்லது ½ அணா லேபிள் அனுப்பவேண்டும்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

ஆரியன் சோதிடசாலைத்தலைவர், திருவாரூர்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

திருவாரூர்:— ஆரியன் சோதிடசாலைத்தலைவர்

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷரவர்களுக்கு.

ஐயா! தாங்கள் எடுத்துக் காட்டிய சாஸ்திர நியாயம் எல்லாம் சரியானதே. எனக்கு வரவர உடம்பு மிகவும் சௌக்கியமாயிருக்கின்றது. தாங்கள் எனக்குச் சொல்லிவரும் சோதிடபலன்கள் எல்லாம் சரிவர ஒத்திருக்கின்றன.

இங்ஙனம் தங்கள்

* V. தங்கவேலுசாமித்தேவர், வித்வான் மாப்பிள்ளை,

23 — 4 — 912 கந்த விலாசம், இராமநாதபுரம்.

* ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர்.

திருவள்ளுவர் மடாலய சாதுமகாசங்கம்.

இச் சங்கம் ஆனந்த ஸு சித்திரை மீ 24-ம் உ புதன் கிழமை ஸ்ரீதியாகேசன் சந்நிதியில் எம்மால் ஏற்படுத்தப்பெற்றது.

இச் சங்கத்தின் நோக்கமாவன:— ஸ்ரீ தியாகேசன் திருவிழாக்காலத்தில் (பங்குனிமாதத்தில்) சுமார் 1000 அடியார்களுக்கு அன்னம் அருத்தலும் தாகநீர் அளித்துத் தாகசாந்தி செய்வித்தலுமாம்.

முக்கிய வேண்டுகோள்:— இதனைக்கண்ணுறும் புண்ணிய சீலர்கள் ஷ டி தர்மத்திற்குதவும் பொருளுதவியை எமக்குத் தபால் மூலமாய் முன்னடியே அனுப்பி உபகரிக்கக்கோருகிறேன்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

23-1-15 சாதுமகாசங்கத்தலைவர், திருவாரூர்.

தலைமயிர் நரைத்து ஏன் கிழவர்களைப்போல் காணப்படுகிறீர்கள்?

☞ எங்கள் **தர்பார் கேச கலாபத்தை**

ஒருதரம் உபயோகிப்பதனால் எந்தக் காரணத்தினால் உண்டான நரைத்த கூந்தலைக் கருக்கச் செய்யும். இது கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும், கூந்தலுக்குப் பலஹீனத்தைப் போக்கடித்து அவைகளுக்குப் பலத்தையும் கொடுக்கும். சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் அதி அற்புதமாய் வேலைசெய்யும். ஒரு தடவை தருவித்துப் பார்த்தால் நம்பிக்கை தெரியும்.

புட்டி விலை புருஷ் உடன் ரூ. 1 — 0 — 0
போஸ்டேஜ் பிரத்தியேகம் 0 — 4 — 0

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.
3 கேசு உள்ள பெட்டி 1-க்கு 0 — 14 — 0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1 — 10 — 0

வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

சந்திரசேகரன் சரித்திரம்.

இஃது ஓர் மகானுபாவனால் எழுதப்பட்ட "திரிகால மாயப் பிரசன்ன நவீனம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது புத்தகம். இப் புத்தகம் இடைக்கிடையே சந்தர்ப்பத்திற் கேற்ற வர்ணமெட்டுகளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கதை படிக்கப் படிக்க இன்பந் தருவதுமன்றி, ஆண்மக்களும் பெண்மக்களும் உலகத்தில் அறிந்து நடக்கவேண்டிய நீதி பலவற்றைக் கற்பிக்கும் ஓர் உத்தம ஆசிரியன் போன்றும் விளங்குவது. எந்த மதத்தினர்களும், ஆண் பெண் சிறுவர் முதலிய யாவர்களும் படித்துப் பயனடையும்படி மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பலவிதமாகச் சொல்வதிற் பயனென்னை? உண்மையில் இப் புத்தகம் படிப்பவர்களுக்கே இதன் இன்பம் விளங்கும்.

புத்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் மிக அழகாக அச்சிட்டு பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அணா 6.

ஜெகசேகர சத்தியவதனி.

மேற்கூறியதுபோலவே இதுவும் "பஞ்சாஸம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு நாவல். இப்புத்தகம் மார்ச் மாதத்தில் வெளிவரும். இதன் விலை அணா 12.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி முற்பண மனுப்பியேனும், வி. பி. மூலமாகவேனும் பெற்றுக் கொள்ளலாம்.

போன். நல்லத்தம்பிமுதலியார்

No. 34. ஆநந்தரங்கப்பிள்ளை வீதி,

புதுச்சேரி.

 50 சாமான்கள் இனும்.

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜா சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

---

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூ. 1—0—0.

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்றும், உதிர்ந்துபோகாமலிருக்கவேண்டுமென்றும், விரும்புகிற ஸ்திரீகள் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் குணத்தை தெரிந்து வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் வெகுதூரம் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்துக் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்திசெய்து, கண்களில் நீர்வடிதல், தலைமயிர்சுண்டு புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொறிசிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும்.

இது தேசமெங்கும் நல்லபெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாக்ஷியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:— ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூல மாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜா ராணி கார்னேஷன் பெட்டி 1. ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6. அத்தர்பில்லை 1. சந்தனப்பில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள சுந்தரமான புரூக்ஸ் 1.

தைரியலட்சுமி அண்டுகோ.

3, இருளப்பன் தெரு, மதரூஸ்.